**ஏழ்மை சார்பு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2016**

---

ஏழ்மை சார்பு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜீஓஎஸ்எல் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராக அறிந்து கொள்ளப்படும் முன்னைய சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2006 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல்பி 87 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4(8) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

ஏழ்மை சார்பு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகிய தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது செயற்திட்டத்தின் அமுலாக்க முகவராக உள்ளது. மட்டக்களப்பில் உள்ள புதிய கல்லடிப் பாலத்தை நிர்மாணிப்பதனை உள்ளடக்கி அக்கரைப்பற்றிலிருந்து திருக்கொண்டியமடு வரையான வீதிப் பிரிவுகளை புனரமைப்பதனூடாக அபிவிருத்தி குன்றிய கிழக்கு உள்ளூர் பொருளாதாரத்தின் பொருளாதார அடிப்படையினை மீளமைப்பதும் செயற்திட்ட பிரதேசங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் நுழைவு வீதிகளை மேம்படுத்துவதன் மூலம் பிராந்திய பொருளாதார சமமின்மையை குறைப்பதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 7,690 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 5,569 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 6,158 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 4,460 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்தழைப்பு முகவரால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2006 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2010 செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. பின்னர் செயற்திட்ட காலம் 2013 செப்தெம்பர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்ததுவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுகள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும்

இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவற்கு ஏற்றவாறு உள்ளகக்கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதிப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தல்களுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இணங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

--------------------

### 2.1 அபிப்பிராயம்

---------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

------------------------------------------------

### 3.1 நிதிகளின் பயன்பாடு

------------------------

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின்போதும் 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறானதுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 4,460 | 6,158 | - | - | 4,990 | 6,401 |
| இலங்கை அரசாங்கம் | 1,109 | 1,532 | - | - | 870 | 1,113 |
| மொத்தம் | 5,569 | 7,690 | - | - | 5,860 | 7,514 |

### 3.2 பௌதீகச் செயலாற்றல்

கிழக்கு மாகாணத்திலுள்ள 100 கிலோமீற்றர்தேசிய வீதிகளைப் புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மட்டக்களப்பிலுள்ள புதிய கல்லடிப் பாலத்தினை நிர்மாணித்தல் என்பன ரூபா 3,806.80 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஒரு வெளிநாட்டு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தன. ஆகவே, கொழும்பு - இரத்தினபுரி – வெல்லவாய – மட்டக்களப்பு வீதியினதும், மட்டக்களப்பு – திரிகொண்டியாமடு – திருகோணமலை வீதி என்பவற்றின் 99 கிலோமீற்றர்களைப் புனரமைத்தலானது ஒப்பந்தக்காரரினால் ரூபா 3,102.88 மில்லியன் மொத்த கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமானது ரூபா 813.47 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஒரு அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனத்திற்கு மீள வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,113.72 மில்லியன் மொத்த கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. தேசிய வீதிகளைப்புனரமைப்பதில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் சமரச வழக்கு ஒன்றைத் தொடுத்து இறுதிப்பணக் கோரிக்கைகளைத் தீர்த்து வைத்தல் மற்றும், விலை ஏற்றங்களின் மீதான சிக்கல்கள் காரணமாக ரூபா 593.43 மில்லியனை கோரியிருந்தார். சமரச நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்பில் ரூபா 3.28 மில்லியன் தொகையை செயற்திட்டம் இது தொடர்பாக செலவு செய்திருந்தது.

## 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றினால் 2016 ஆகஸ்ட் 25இல் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைய, பணிப்புரைத் திகதியிலிருந்து 100நாட்களுக்குள் கொடுப்பனவுகளின் மீதான வட்டியுடன், கொடுப்பனவுகளில் தாமதத்திற்கு நிலவும் வட்டி வீதத்தில் வட்டி செலுத்துவதற்கும் ரூபா 336.62 மில்லியன் தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும், செல்மதிகளைத் தீர்ப்பதற்கு செயற்திட்டம் 2016 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகளிலிருந்து உழைத்த இலாபங்கள் மீது ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட 9.22 மில்லியன் தொகையான வருமானவரி செயற்திட்டத்தினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும், 2014 இல் ஆலோசகரின் ஊதியங்கள் மீது ரூபா 16.55 மில்லியன் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் நியாயமற்ற முறையில் மேற்கொண்ட அச்செலவுகளை அறவிடுவதற்கு செயற்திட்டத்தால் 2016 திசெம்பர் 31ஆம் திகதி வரை கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.